<u>பாரத பிரதமர் உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களுக்கான திட்டம் (PM-FME)</u>

130 கோடி குடிமக்களின் ஒன்றிணைந்த தீர்மானம் இந்தியாவை தன்னம்பிக்கை கொள்ள வைப்பதாகும். உள்ளூர் உற்பத்தி, உள்ளூர் சந்தைகள், உள்ளூர் விநியோகச் சங்கிலி ஆகியவற்றில் முன்னேற்றத்தை நோக்கி செல்லும் வழி உள்ளது. உள்ளூர் என்பது ஒரு தேவை மட்டுமல்ல, ஒரு பொறுப்பும் ஆகும்.

- மாண்புமிகு பாரத பிரதமர் நரேந்திர மோடி, இந்திய அரசு

உணவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள குறுநிறுவனங்களின் வளர்ச்சிக்கான வாயில்கள் திறக்கப்படுகிறது.

இந்திய உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகம் (MoFPI). மாநிலங்களுடன் கூட்டாக இணைந்து பாரத பிரதமர் உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களுக்கான கடன் திட்டத்தின் மூலம் நிதி உதவி, தொழில்நுட்ப உதவி, மற்றும் ஆதரவு வழங்குவதன் மூலம் தற்போதுள்ள சிறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்களை மேம்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கம் ஆகும்.

இதன் முக்கிய சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

---

(i) GSI FSSAIன் சுகாதாரத் தரங்கள் மற்றும் உத்யோக் ஆதார் ஆகியவற்றிற்கான பதிவுடன் மேம்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதலுக்கான மூலதன முதலீட்டிற்கான ஆதரவு.

(ii) திறன் பயிற்சி மூலம் திறன் மேம்பாடு, உணவு பாதுகாப்பு, தரநிலைகள் மற்றும் சுகாதாரம் மற்றும் தர மேம்பாடு குறித்த தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்குதல்.

(iii) முழு திட்ட அறிக்கை தயாரித்தல், வங்கிக் கடன் பெறுதல் மற்றும் மேம்படுத்துதல் சேவைகளுக்காக உதவிக் கரங்களை நீட்டுதல்.

(iv) உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு (FPO) ஆதரவு, சுய உதவிக்குழுக்கள் (SHG) மூலதன முதலீட்டிற்கான உற்பத்தியாளர்கள் கூட்டுறவு, பொதுவான உள்கட்டமைப்பு மற்றும் வர்த்தக மற்றும் சந்தைப்படுத்தல். ஆகியவற்றிற்கு தேவையான உதவிகளை வழங்குதல்.

ஒரு மாவட்டம் ஒரு விளைபொருள் (ODOP):

---

உள்ளீடுகள் கொள்முதல், பொதுவான சேவைகளைப் பெறுதல் மற்றும் தயாரிப்புகளைப் பெறுவதற்கு இந்த திட்டம் ஒரு மாவட்டம் ஒரு விளைபொருள் (ODOP) என்னும் அணுகுமுறையை பின்பற்றுகிறது. தற்போதுள்ள தொழில் மற்றும் மூலப்பொருட்களின் கிடைக்கும் தன்மையைக் கருத்தில் கொண்டு ஒரு மாவட்டத்திற்கான விளை பொருளை மாநிலங்கள் அடையாளம் காணும். ஒரு மாவட்டம் ஒரு விளைபொருள் என்பது (ODOP) எளிதில் கெட்டு அழிந்துபோகக்கூடிய வேளாண் உற்பத்தி, பொருளாகவோ,

தானிய அடிப்படையிலான தயாரிப்பு அல்லது ஒவ்வொரு மாவட்டத்திலும் அவற்றின் பிற தொடர்புடைய துறைகளில் பரவலாக உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருளாகவோ இருக்கலாம். அத்தகைய தயாரிப்புகளின் உதாரண விளக்கப் பட்டியலில் மா, உருளைக்கிழங்கு, லிச்சி, தக்காளி, மரவள்ளிக்கிழங்கு, கின்னு, பூஜியா, பெத்தா, அப்பளம், ஊறுகாய், தினை சார்ந்த பொருட்கள், மீன்வளம், கோழி, இறைச்சி மற்றும் விலங்குகளின் தீவனம் ஆகியவை அடங்கும். ODOP **விளைபொருள் உற்பத்தி செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இருப்பினும், பிற தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களும் ஆதரிக்கப்படும். எனினும் பொதுவான உள்கட்டமைப்பு வணிக முத்திரை மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றிற்கான முழு ஆதரவு** ODOP **அணுகுமுறையின் கீழ் வரும் தயாரிப்புகளுக்கு மட்டுமே வழங்கப்படும்.**

தனிநபர் சிறுநிறுவன உணவு பதப்படுத்தும் நிறுவனங்களை மேம்படுத்துதல்:

---------------------------------------------------------------------------------------------------------------------

தனிநபர் குறுநிறுவன உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் தங்களை மேம்படுத்த விரும்பினால் கடன்-இணைக்கப்பட்ட மூலதன மானியத்தைப் பெறலாம் தகுதி வாய்ந்த மொத்த திட்ட செலவில் 35% அதிகபட்சமாக ஒரு நிறுவனத்திற்கு (ரூ.10 லட்சம் வரை) உச்சவரம்புடன் கூடிய கடன் வசதி. பயனாளியின் பங்களிப்பு குறைந்தபட்சம் 10% இருக்க வேண்டும் மீதமுள்ளவை வங்கியில் இருந்து கடனாக பெற்று இருக்க வேண்டும். FPO கள் / சுய உதவிக்குழுக்கள் (SHG) / கூட்டுறவு நிறுவனங்களுக்கு இந்த திட்டம் முழு மூலதன முதலீட்டிற்கான கடன் இணைக்கப்பட்ட மானியம் @ 35% உடன் ஆதரவை வழங்கும்.

சுய உதவி குழுக்களுக்கு விதை மூலதனம்:

----------------------------------------------------------------------

பணி மூலதனம் மற்றும் சிறிய கருவிகளை வாங்குவதற்காக உணவு பதப்படுத்துதலில் ஈடுபடுபவர்களுக்கு ஒரு சுய உதவிக்குழு உறுப்பினருக்கு 40,000/- வரை பணி மூலதனம் வழங்கப்படும். சுய மூலதன சம்மேளனத்திற்கும் மூலதனம் வழங்கப்படும். இது சுய உதவிக் குழுக்கள் மூலம் உறுப்பினர்களுக்கு கடனாக நீட்டிக்கப்படும்.

பொதுவான உள்கட்டமைப்பு வசதிகள்:

---------------------------------------------------------------

பொதுவான செயலாக்க வசதிகள், ஆய்வகம், கிடங்கு, குளிர் சேமிப்பு, மேல் உறைகள் மற்றும் பதப்படுத்தும் மையம் உள்ளிட்ட பொதுவான உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக FPO கள், சுய உதவிக்குழுக்கள் (SHG), கூட்டுறவு நிறுவனங்கள், அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழில்முனைவோருக்கு கடன் இணைக்கப்பட்ட மானியம் 35% வரை வழங்கப்படும்.

வர்த்தக முத்திரை மற்றும் சந்தைப்படுத்துதல் ஆதரவு:

------------------------------------------------------------------------------------------

தரமான கட்டுப்பாடு, தரப்படுத்தல் மற்றும் உணவைக் கடைப்பிடிப்பதற்கான ஏற்பாடுகளுடன் பொதுவான மேலுறை மற்றும் வர்த்தக முத்திரை இவற்றை மேம்படுத்த ODOP அணுகுமுறையைப் பின்பற்றி இத்திட்டத்தின் கீழ் மாநில அல்லது பிராந்திய மட்டத்தில் FPO கள் / சுய உதவிக்குழுக்கள் (SHG) / கூட்டுறவு நிறுவனங்கள் அல்லது சிறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்களின் SPV க்கு சந்தைப்படுத்தல் மற்றும் நுகர்வோர் சில்லரை விற்பனையை கருத்தில் கொண்டு வர்த்தக ஆதரவு வழங்கப்படும். இந்த நிறுவனங்கள் அவர்கள் தயாரித்த முழு திட்ட அறிக்கை மற்றும் மாநில நோடல் ஏஜென்சி பரிந்துரைப்படியும் ஆதரிக்கப்படும். வர்த்தக முத்திரை மற்றும் சந்தைக்கான ஆதரவு மொத்த செலவினங்களில் 50% ஆக இருக்கும்.

விண்ணப்பிப்பதற்கான நடைமுறை:

----------------------------------------------------------

உதவி பெற விரும்பும் தற்போதைய உணவு பதப்படுத்தும் பிரிவுகள் ஆன்லைனில் FME போர்ட்டலில் விண்ணப்பிக்கலாம். கள அளவிலான ஆதரவிற்காக வளர்ச்சி நிறுவனங்கள் மூலம் முழு திட்ட அறிக்கை தயாரிப்பது, வங்கிக் கடனைப் பெறுவது, தேவையான பதிவு மற்றும் FSSAI, உத்யோக் ஆதார் மற்றும் ஜிஎஸ்டி ஆகியவற்றின் உணவுத் தரங்கள் உள்ளிட்ட உரிமங்களைப் பெறுவதற்கான ஆலோசனை மற்றும் உதவிகள் வழங்கப்படும்.

FPO கள் / சுய உதவிக் குழுக்கள் / கூட்டுறவு, பொதுவான உள்கட்டமைப்பு மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தகத்திற்கான ஆதரவுக்கான விண்ணப்பங்களை ஒரு முழு திட்ட அறிக்கையுடன் மாநில நோடல் நிறுவனத்திற்கு (SNA) சமர்ப்பிக்கலாம். SNA இந்த திட்டத்தை மதிப்பீடு செய்து வங்கிக் கடனுக்கு பரிந்துரைக்கும்.

அரசாங்கத்தால் வழங்கப்படும் மானியம்,
கடன் வழங்கும் வங்கியில் பயனாளியின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். கடனின் கடைசி தவணையில் இருந்து மூன்று வருட காலத்திற்குப் பிறகு, பயனாளி கணக்கு இன்னும் நிலையானது மற்றும் நிறுவனம் தொடர்ந்து செயல்படுகிறது என்றால், இந்த தொகை பயனாளியின் வங்கிக் கணக்கில் சரிசெய்யப்படும்.

வழிகாட்டுதல்கள் மற்றும் தொடர்பு:

-------------------------------------------------------------

திட்டத்தின் விரிவான வழிகாட்டுதல்களை அமைச்சகத்தின் இணையதளமான mofpi.nic.in இல் காணலாம். புதுவையைச் சேர்ந்த தனிநபர் தொழில்முனைவோர் மற்றும் பிற பங்குதாரர்கள் புதுவை யூனியன் பிரதேச நோடல் ஏஜென்சியான பிப்டிக் (PIPDIC) நிறுவனத்தை தொடர்பு கொள்ளலாம்.